RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22449

OPEN ACCESS

# தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வழிபாட்டு நெறிகளுக்கும் மனதுக்கும் உள்ள தொடர்பு

**சு. ஞானதீபன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், நாமக்கல்-638183, தமிழ்நாடு, இந்தியா

# The Relationship between Rituals and Mind in Tamil Literature

**S. Gnanadheepan** [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Komarapalayam, Namakkal-638183, Tamil Nadu, India

* Corresponding Author: gnanadeepan30@gmail.com

Received: 29-05-2022
Revised: 18-09-2022
Accepted: 03-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

The Siddhas have spoken about the relationship between rituals and the mind. Vedatri Maharishi has said the connection between mind and rituals. The sages have said that the absence of mind is the success of penance. Idaikadar, Thirumoolar, Agathiyar, Sivavakiyar and Thiruvalluvar have explained in their hymns that the great success for a human is that he is able to control his mind and if mind is good there is no need for any mantras. All these things are explained in this article.

**Keywords:** Siddhas, Relationship, Rituals, Tamil Literature

## முன்னுரை

வழிபாட்டு நெறிகளுக்கும் மனதுக்கும் உள்ள தொடர்பு பற்றி சித்தர்கள் கூறியுள்ளனர். சுத்தவெளி மனம் தவம் இம்மூன்றுக்கும் உள்ள தொடர்பை வேதாத்திரி மகரிஷி கூறியுள்ளார் மனமற்ற நிலையே தவத்தின் வெற்றி என்று மகான்கள் கூறியுள்ளனர். மனம் என்னும் மாடு அடங்கினால் முக்தி என்று இடைக்காடர் கூறியுள்ளார்.

## வழிபாட்டு நெறிகளுக்கும், மனதுக்கும் உள்ள தொடர்பு

- மனதின் ஒருமுனை 1, 2, 3 டெல்டா அலைவரிசை உள்ள அழிவற்ற நிலை.
- மனதின் மறுமுனை 14முதல்40 அலைவரிசை உள்ள அழியும் நிலை.
- மனிதன் கோபம், பொறாமை, வஞ்சம், காமம், ஆசைவயப்பட்ட நிலையில் 14முதல்40 வரை பீட்டா அலைவரிசை நிலவுகிறது.
- எண்ணமற்ற நிலையில் 8,9,10,11,12,13 என்ற ஆல்பா அலைவரிசை உள்ள தவ நிலை.
- பேரியக்க மண்டலத்தில் 4,5,6,7 தீட்டா அலைவரிசை நிலவுகிறது.
- சுத்தவெளியில் 1, 2, 3 டெல்டா அலைவரிசை நிலவுகிறது.

1, 2, 3 டெல்டா அலைவரிசை இயல்பாகவே எங்கு நம் மனதுக்கு வருகிறதோ அந்த இடத்தில் சுத்தவெளியின் குறியீடாக உருவமற்ற சிவலிங்கத்தை சித்தர்கள் நட்டு வைத்து எல்லோரும் அந்தப்

பலனைப் பெற காலத்தால் அழியாத வண்ணம் ஆலயங்களாகக் கட்டினர். 1, 2, 3 அலைவரிசையில் ஆத்மா லயம் ஆகுமிடம் ஆலயம்.

“வெட்ட வெளி தன்னை மெய்யென்று இருப்போர்க்குப்

பட்டயம் ஏதுக்கடி? குதம்பாய்

பட்டயம் ஏதுக்கடி?” - குதம்பை சித்தர்

வெட்ட வெளிக்குள்ளே விளங்கும் சதாசிவத்தைக்

கிட்டிவரத்தேடி கிருபை செய்வது எக்காலம்?” -பத்ரகிரியார்

வீறும் பெருவெளி ஜோதி- மேலும்

வெட்ட வெளியில் விளங்கிய ஜோதி” (Avvai Duraisamy Pillai, 1957)

விண்ணிறைந்த மண்ணிறைந்து... எண்ணிறந்தெல்லை இலாதானே

ஆக்கம் அளவிறுதி இல்லாய்... துன் இருளே தோன்றாப் பெருமையனே” (Subramaniya Pillai, 2009).

“சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் திறம் அரிது” என்று சும்மா இருத்தல் என்ற 1, 2, 3 டெல்டா அலைவரிசை நிலையை தாயுமானவர் கூறுகிறார்

## வேதாத்திரி மகரிஷியின் சுத்தவெளிக் கொள்கை

சுத்தவெளி எப்பொழுதும் உள்ளது. காலத்தால் அழிவற்றது. அது நேற்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது, நாளையும் இருக்கும். பகலில் சூரியனைப் பார்க்கிறோம். சூரியனை எடுத்துவிட்டால் இருள் வரும். இரவில் வானத்தில் நட்சத்திரங்களைப் பார்க்கிறோம். நட்சத்திரங்களை எடுத்துவிட்டால் மீதி நாம் பார்ப்பது சுத்தவெளியைத்தான். அந்த வெளிதான் கும்மிருட்டாக கருப்பாக உள்ளது. பல லட்சம் சூரியக்குடும்பங்களை சுத்தவெளிதான் தாங்கிக்கொண்டுள்ளது. சுத்தவெளி வேறு ஒரு பொருளில் இருந்து தோன்றவில்லை. சுயமாகத் தோன்றியது. (சுயம் - சிவம் - சுயம்பு)

1, 2, 3 டெல்டா அலைவரிசையில் மனம் உள்ள போது நெற்றியில் மூன்றாம் கண் திறக்கும். அது மன ஆசை எனும் மாயையை எரிக்கும். அதுவே மன்மதனை சிவம் எரித்த நிலை. சுடுகாட்டில் நிலையாமையை பார்க்கும் போது மன அலைவரிசை குறைகிறது. எனவே சிவம் என்பதை காடு உடைய சுடலை பொடி பூசி என்று சுடுகாட்டைக் குறியீடாகக் கொள்கிறோம். சுத்தவெளி என்பது சிவம் என்றும், இயஙகும் கோள்கள் சக்தி என்ற பெண்ணாகவும் உருவகிக்கப்பட்டது. மெய், வாய், மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து புலன்கள் மதயானை போல. அந்த ஐந்தும் 1, 2, 3 அலைக்கு வந்தால் அது ஐந்து கரத்தன் எனும் விநாயகர். ஆறாவதாக மனதையும் சேர்த்தால் ஆறுமுகம் மனம் டெல்டாவுக்கு வந்தால் சரம்சரம் ஆக ஓடும் மூச்சு சரியாக ஓடும். இது சரவணன். வலமூச்சும் இடமூச்சும் வள்ளி தெய்வானை. மூச்சு ஒழுங்கானால் என்றும் குமரன். வயசாகாது, மரணமில்லை. ஓம் எனும் போதும், இறை நாமங்களை சொல்லும் போதும் மனம் அடங்கும். மாமிச உணவைக் கண்டு நம் கண்ணில் நீர் வந்தால் நாம் தவத்தின் பிள்ளை. நாக்கில் நீர் வந்தால் நாம் விதியின் பிள்ளை.

சுத்தும் கோள்கள் சுதர்சனம் எனும் சக்கரம். சுத்தும் ஓசை பாஞ்சசன்னியம் எனும் சங்கோசை. கருப்பு நிற சுத்தவெளி மகாவிஷ்ணு.

மனம் ஒரு குரங்கு. அது அடங்கினால் ஆஞ்சநேயராக சிரஞ்சீவியாக ஆற்றல் பெறும். மாற்ற மனம் கழிய நின்ற மறையோன் என்று சிவபுராணம் அந்நிலையைக் கூறும்.

டெல்டா நிலையில் மனம் அடங்கினால் ஒருவனுக்கு ஒருத்தி என்கிற ராமனாக நாம் உள்ளோம்.

அதே மனம் பீட்டா நிலையில் அடங்காமல் உள்ள போது பிறர் மனைவியை காமம் கொண்டு கடத்தும் இராவணன் நாம். அந்த இராவணனுக்கு 10 தலைகள், நமக்கோ 100 தலைகள்!

மனம் எனும் மாடு: அந்த முரட்டுக்காளையை நாம் அடக்கி அதன்மீது அமர்ந்தால் நந்தி மீது உள்ள சிவமாகும். அடங்கிய மனமே நந்தீசர். அதுவே பிரதோச வழிபாடு. மனம் என்னும் மாடு அடங்கினால் சினம், ஆசை முதலியவை அகலும். அப்போது முக்தி கிடைக்கும். சித்தி கிடைக்கும். அண்டத்தின் ரகசியங்களைக் கண்டறியலாம். இதனை சித்தர் இடைக்காடரின் பாடல் உணர்த்துகிறது.

"மனமெனும் மாடு அடங்கினால் தாண்டவக்கோனே

முக்தி வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே

சினம் என்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே

யாவும் சித்தி என்று நினையேடா தாண்டவக்கோனே

ஆசை எனும் பசு மாளின் தாண்டவக்கோனே இந்த

அண்டமெல்லாங் கண்டறிவாய் தாண்டவக்கோனே" இடைக்காடர்

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு

மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்

பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே" (Manikam, 2004)

"மனமது செம்மையானால் மந்திரம் ஜபிக்க வேண்டாம்" அகத்தியர்

"கோயிலும் மனதுள்ளே குளங்களும் மனதுள்ளே" சிவவாக்கியர்

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்" (Puliyur Kesigan, 2009)

"உள்ளம் பெருங்கோயில்" (Manikam, 2004)

"இறைத்துகள் - அவனுள் - இறை அவன் - இறைவன்

ஜீவகாந்தத்துகள் அவனுள் - ஜீவன் அவன் - சிவன்

இந்நிலை அடைந்தால் அவனே பெரிய ஆள் - பெரு ஆள் - பெருமாள்

தே அவன் - தேவன்

வான்துகள் அவனுள் - வான் அவன் - வானவன்

எல்லாம் நிறைந்த சுத்தவெளி - அல்லா

ஆதியுடன் சமமாதல் - அதுவே சமாதி

வெட்டவெளிக்கும் தவத்துக்கும் தொடர்பு உள்ளது

சுத்தவெளியில் 1, 2, 3 டெல்டா அலைவரிசை நிலவுகிறது.

தவத்தின் உச்சம் என்பது மனமற்ற நிலை, அதுவே டெல்டா அலைவரிசை உள்ள நிலை எனவே சுத்தவெளி போல் மனதை அமைதி ஆக்குவதே தவம் ஆகும்.

## முடிவுரை

வெட்ட வெளி தன்னை மெய்யென்று இருப்போர்க்குப் பட்டயம் ஏதுக்கடி? குதம்பாய் என்று குதம்பைச் சித்தரும், வெட்ட வெளிக்குள்ளே விளங்கும் சதாசிவத்தை என்று பத்ரகிரியாரும், வீறும் பெருவெளி ஜோதி- மேலும் வெட்ட வெளியில் விளங்கிய ஜோதி என்று வள்ளலாரும், விண்ணிறைந்த மண்ணிறைந்து… எண்ணிறந்தெல்லை இலாதானே ஆக்கம் அளவிறுதி இல்லாய்… துன் இருளே தோன்றாப் பெருமையனே என்று மாணிக்கவாசகரும் கூறியுள்ளனர். இதன்பின் வேதாத்ரி மகரிஷியும்

சுத்தவெளி குறித்து விரிவாக விளக்கியுள்ளார். மனமெனும் மாடு அடங்கினால் முக்தி என்று இடைக்காடரும், உள்ளம் பெருங்கோயில், மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற் பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே என்று திருமூலரும், மனமது செம்மையானால் மந்திரம் ஜபிக்க வேண்டாம் என்று அகத்தியரும், கோயிலும் மனதுள்ளே குளங்களும் மனதுள்ளே என்று சிவவாக்கியரும், மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்று திருவள்ளுவரும் கூறியுள்ளனர்.

## References

Avvai Duraisamy Pillai, (1957) Thiruvarutpa Moolamum Uraiyum, Annamalai University, Chidambaram, India.

Manikam, A. (2004) Thirumanthiram, Varthaman Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Subramaniya Pillai, K. (2009) Thiruvasagam, Poompuhar Pathippagam, Chennai, India

Vethathiri Maharishi, (2008) Manavalakalai, World Community Service Centre, Vethathiri Publications, Erode, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License